**அவசர இயற்கை அனர்த்த புனரமைப்புச் செயற்திட்டம் (மத்திய, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள்) 2013**

அவசர இயற்கை அனர்த்த புனரமைச்சுச் செயற்திட்டத்தின் (மத்திய, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள்) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 செப்தெம்பர் 29 ஆந் திகதிய எஸ்எல்- பி103 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

அவசர இயற்கை அனர்த்த புனரமைச்சுச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம், மத்திய, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வடமத்திய மற்றும் கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளதுடன் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. சேதமடைந்த வீதிகள் மற்றும் நீர்ப்பாசன திட்டங்களை புனரமைப்பதன் மூலம் மத்திய, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் வெள்ளத்தில் மூழ்கிய பகுதிகளில் சமூக பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் மேலும் சேதமடைந்ததை புனரமைப்பதும் அவற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வதிவிட சுற்றுச்சூழலின் பாதுகாப்பு மற்றும் நிலைபேற்றை மீளமைத்து மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 10,886 மில்லியனிற்கு சமமான ஜ.யென் 8,313 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,161 மில்லியனிற்கு சமமான ஜ.யென் 7,000 மில்லியன் அல்லது 84 சதவீதம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. மிகுதித்தொகை ரூபா 1,725 மில்லியனிற்கு சமமான ஜ.யென் 1,313 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 திசெம்பர் 7 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 7 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான

நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் ஆகியோரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுதலுக்கு மீளளிப்புக்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீது நியாயமான நம்பிக்கைகொள்ள முடியும் என்பதும்,

(ஐ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள்நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான அளவீடுகளை எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 4,808,999,402 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 8,737,393,220 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| செலவின விடயம் | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 4,298,601,386 | 3,442,872,615 | 7,781,552,125 |
| உபகரணங்கள் - நீர்ப்பாசனத் திணைக்களம் | - | 136,698,530 | 136,698,530 |
| கடப்பாட்டுக் கட்டணம் | 2,991,781 | 831,479 | 3,823,260 |
| வட்டி | 606,501 | 123,363 | 729,864 |
| நிர்வாகக் கிரயம் | 506,799,734 | 306,286,298 | 814,589,441 |
| மொத்தம் | 4,808,999,402 | 3,886,812,285 | 8,737,393,220 |

**4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | 2013 | |
|---|---|---|
| | ஜ.யென் | ரூபா |
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 2,046,601,143 | 3,028,765,031 |
| கூட்டு:- | | |
| மீள் நிரப்பல்கள் | 1,642,873,003 | 2,182,743,847 |
| +/ - வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | (343,442,989) |
| | 3,689,474,146 | 4,868,065,889 |
| கழி: பற்றுதல்கள் | 3,269,243,026 | 4,344,499,937 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 420,231,120 | 523,565,952 |

**5. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள் மற்றும் உபபாகங்களின் பதிவேடொன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின்

ரூபா 139,759,109 பெறுமதியான சொத்துக்களின் கணிப்பீட்டுச் சபை செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட செத்துக்களின் உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 6 நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

பணவளிப்பு பட்டோலையின் பிரகாரம், ரூபா 10,886 மில்லியனிற்கு சமமான ஜ.ஜென் 8,313 மில்லியன் தொகையான மொத்த நிதிகள் 2011 முதல் 2016 வரையான ஆறு ஆண்டு காலத்திற்குள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டியதுடன் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் ஊடாக 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 5,075 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. அதில், ஒதுக்கப்பட்ட நிதிகளின் ரூபா 4,809 மில்லியன் அல்லது 95 சதவீதம் மீளாய்வாண்டிற்காக செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. நிதிகளின் பயன்பாட்டு விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பயன்படுத்திய தொகை | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய செலவினம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஜ.யென் மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ஜ.யென் மில் | ரூபா. மில் | ஜ.யென் மில் | ரூபா. மில் |
| ஜேஐசீஏ | 7,000 | 9,161 | 4,421 | 3,236 | 4,302 | 5,521 | 7,923 |
| இலங்கை அரசாங்கம் | 1,313 | 1,725 | 654 | 384 | 507 | 576 | 815 |
| **மொத்தம்** | **8,313** | **10,886** | **5,075** | **3,620** | **4,809** | **6,097** | **8,738** |

### 6.2 பௌதீக செயலாற்றல்

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 149 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் (329.74 கிலோமீற்றர்கள்) மற்றும் வெள்ளம் காரணமாக சேதமடைந்த மூன்று மாகாணங்களிலுள்ள 577 நீர்ப்பாசன வேலைகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட வேலை முன்னேற்றங்களின் மாகாண ரீதியான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| புனரமைப்பு வேலைகள் | செயற்திட்ட காலத்தின் போது பூர்த்தியாக்க எதிரடபாரடத்த வேலைகள் | | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்ட வேலைகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | மத்திய மாகாணம் | கிழக்கு மாகாணம் | வடமத்திய மாகாணம் | மத்திய மாகாணம் | கிழக்கு மாகாணம் | வடமத்திய மாகாணம் |
| வீதிகள் - தேசிய வீதிகள் | | | | | | |
| - எண்ணிக்கை | 07 | 04 | 08 | 02 | 02 | 06 |
| - கிலோமீற்றர் | 24.73 | 21.35 | 46 | 2.5 | 8.35 | 37 |
| - மாகாண வீதிகள்- | | | | | | |
| - எண்ணிக்கை | 57 | 66 | 35 | 26 | 35 | 33 |
| - கிலோமீற்றர் | 94.21 | 98.72 | 101.32 | 29.06 | 28.78 | 95.297 |
| நீர்ப்பாசனம் - பிரதான மற்றும் நடுத்தரம் | | | | | | |
| நீர்ப்பாசன வேலைகள் | - | 217 | 306 | - | 217 | 306 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பிரதான வேலைகள் | நீர்ப்பாசன | - | 34 | 40 | - | 30 | 17 |

2014 யூன் 30 இல் அநுராதபுரம் மாவட்டத்தில் பல இடங்களில் கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு கணக்காய்வு மூலம் வேலைத்தள ஆய்வுகள் செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மனன்கட்டி குளத்திற்கான அணுகு வீதியின் குறுக்குபாலத்தின் நிர்மாண வேலைகள் ரூபா 7,826,000 ஆக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், உரிய வேலைகள் ரூபா 4,622,076 கிரயத்தில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது, ஆதலால், நிர்மாண வேலைகளின் ஆரம்ப கட்டத்தில் முறையான மதிப்பீடு இல்லாதிருந்தமையை குறிக்கின்றது. மேலும், தாபிக்கப்ட்ட பாலத்தின் 17 இடங்களில் காணப்பட்ட வெடிப்புக்கள் வேலையின் தரம் தென்பட்டது.

(ஆ) மனன்கட்டி குளத்தின் வடிகாலமைப்பு முறைமையின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் ரூபா 6,993,000 ஆன மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. வேலைத் திட்டத்தின் பிரகாரம், வீதி ஓரத்திற்கு இடையிலுள்ள வீடுகளிற்கு 100 ‘‘கியூமி’’ பைப்கள் நுழைவு வழங்குவதற்கு பயன்படுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், ஆரம்ப வேலைத்திட்டத்தின் பிரகாரம், வடிகாலமைப்பு முறைமை நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆகவே, வீடுகளிற்கு நுழைவு வழங்குவதற்கு பொருத்தப்பட்ட 96 கியூமி ‘‘பைப்கள்’’ முறையாக பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கடகத்த வடிகாலமைப்பின் 1,200 மீற்றர் புனரமைப்பு வேலைகள் மிகையில் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அத்தகைய வேலைகள் மதிப்பிடப்பட்ட கிரயத்தை விட குறைவாக 18 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையான வீச்சில் குறைந்த கிரயத்தில் விவசாயிகள் அமைப்புகளிற்கு வழங்கப்பட்டிருந்த நான்கு ஒப்பந்தங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் மேலதிக அதவானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 0+00 முதல் 3+100 வரையான வடிகாலமைப்பு கொங்றீட் இடுவதற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2+50 மீற்றர்கள் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், வடிகாலமைப்பு முறைமை ஒரேயொரு கால்வாயை மாத்திரம் கொண்டிருந்ததுடன் நெல் வயல்களிற்கான தண்ணீர் வழங்குவதற்கு போதியதாக இருக்கவில்லை.

(ii) 3+00 மீற்றர்கள் முதல் 6+00 மீற்றர்கள் வரையான வடிகாலமைப்பு புனரமைப்பிற்கான ஒப்பந்தத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வாய்க்கால் சேதமடைந்திருந்தது.

(iii) 6+00 மீற்றர்கள் முதல் 9+00 மீற்றர்கள் வரையான வடிகாலமைப்பு முறைமை வீதிக் கரையோர குடியிருப்பாளர்களால் செய்யப்பட்ட வடிகால்களை தடுத்து அத்துமீறிய குடியிருப்பு நிர்மாணங்களால் தடைப்பட்டிருந்தது.

(ஈ) இச் செயற்திட்டத்தால் புனரமைக்கப்பட்ட ஹகடகஸ்திகிலிய – கொன்வெவ – தெமட்டெவெவ வீதியின் வீதி முனை வீதி இரு பகுதிகளிற்கும் இடையில் வடிகாலமைப்பு முறைமையொன்றின் அகலமாக்கும் புனரமைத்தல்களுக்காக 8+540 முதல் 8+880 கிலோமீற்றர் வரையில் கழுவிச்செல்லப்பட்டிருந்தது.

(உ) 6+976 கிலோமீற்றறில் இருக்கின்ற பாலம் புனரமைக்கப்பட்ட வேண்டியிருந்த போதிலும் இது 2014 ஆகஸ்ட் 31 வரையும் புனரமைக்கப்பட்டிருக்கவில்லை.